WWW.OLEVELAPI.COM


# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2019
## 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்
### புள்ளித்திட்டம்

பகுதி I - 1 x 40 = **40 புள்ளிகள்**

பகுதி II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 ஆம் வினா | - | 10 x 2 | = | 20 புள்ளிகள் | |
| 02 ஆம் வினா | - | | = | 25 புள்ளிகள் | |
| 03 ஆம் வினா | - | | = | 10 புள்ளிகள் | |
| 04 ஆம் வினா | - | | = | 10 புள்ளிகள் | |
| 05 ஆம் வினா | - | | = | 15 புள்ளிகள் | |
| **மொத்தம்** | | | | = | **80 புள்ளிகள்** |

பகுதி III

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 ஆம் வினா | - | 10 x 2 | = | 20 புள்ளிகள் | |
| 02 ஆம் வினா | - | 04 x 5 | = | 20 புள்ளிகள் | |
| 03 ஆம் வினா | - | | = | 15 புள்ளிகள் | |
| 04 ஆம் வினா | - | | = | 15 புள்ளிகள் | |
| 05 ஆம் வினா, 06 ஆம் வினா, 07 ஆம் வினா | } | ஏதேனும் ஒன்று எழுதியிருந்தால் | = | 10 புள்ளிகள் | |
| **மொத்தம்** | | | | = | **80 புள்ளிகள்** |

**இறுதிப்புள்ளியைக் கணித்தல்**

WWW.OLEVELAPI.COM

| | | | |
|---|---|---|---|
| **பத்திரம் I** | = | **40** | **புள்ளிகள்** |
| **பத்திரம் II** | = | **80** | **புள்ளிகள்** |
| **பத்திரம் III** | = | **80** | **புள்ளிகள்** |
| **மொத்தம்** | = | **200** | **புள்ளிகள்** |
| **இறுதிப்புள்ளிகள்** | = | **200 ÷ 2** | |
| | = | **100** | |



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும்போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப்பதியும்போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .............................................................................. ✓ $\frac{4}{5}$
..............................................................................
..............................................................................

(ii) .............................................................................. ✓ $\frac{3}{5}$
..............................................................................
..............................................................................

(iii) .............................................................................. ✓ $\frac{3}{5}$
..............................................................................
..............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

WWW.OLEVELAPI.COM

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**✶ புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** வினாப்பத்திரம் II இற்கான புள்ளி வினாப்பத்திரம் II இற்குரிய புள்ளி பட்டியலில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "**Total Marks**" எனும் நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**
சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் பதியப்படலாகாது.**



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**புள்ளி வழங்கும் திட்டம்**

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | - | 40 புள்ளிகள் |
| வினாத்தாள் II | - | 80 புள்ளிகள் |
| வினாத்தாள் III | - | 80 புள்ளிகள் |
| மொத்தம் | - | 200 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளிகள் | - | $\frac{200}{2}$ புள்ளிகள் |
| | - | **100 புள்ளிகள்** |

**மிக முக்கியம்**

அறிவுறுத்தல்களுக்கேற்ப வினாக்களைத் தெரிவு செய்திருக்க வேண்டும். மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்திகளினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டுள்ள சகல விடைகளுக்கும் புள்ளி வழங்கப்பட வேண்டும். பின்னர் சகல புள்ளிகளையும் முதற்பக்கத்தில் பதிய வேண்டும். அதில் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக எழுதப்பட்ட விடைகளுக்கான புள்ளிகளை வெட்டி இறுதிப் புள்ளி கணிக்கப்பட வேண்டும்.

தமிழ்மொழியும் இலக்கியமும் I, II, III ஆகிய விடைத்தாள்களை மதிப்பிட்டு அவற்றின் புள்ளிகளை விடைத்தாள் II இல் பதிவு செய்து இறுதிப் புள்ளியைக் கணிக்குக.

**வினாத்தாள் I**

**நோக்கங்கள்**

WWW.OLEVELAPI.COM

1. பரீட்சார்த்திகளது மொழிவள ஆற்றல்களை மதிப்பிடுதல்.
2. சொற்களையும் கலைச்சொற்களையும் சொற்றொடர்களையும் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தலைப் பரீட்சித்தல்.
3. பிரயோக இலக்கண அறிவினைக் கணிப்பிடல்.
4. இலக்கண வழுவின்றி வாக்கியங்களை அமைக்கும் திறனை மதிப்பிடல்.
5. எழுத்துப் பிழையின்றி எழுதும் திறனைக் கணிப்பிடல்.
6. உரைப்பகுதிகளை வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலை மதிப்பிடுதல்.
7. வாக்கியங்களைக் கருத்துத் தொடர்பில் ஒழுங்குபடுத்திப் பந்தியாக்கஞ் செய்யும் திறனைக் கணிப்பிடல்.



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**வினாத்தாள் I இற்குப் புள்ளியிடுவதற்கான அறிவுறுத்தல்கள்.**

1. முதலில் வினாத்தாள் I இற்கான விடைத்தாள்களைப் பார்வையிட்டு ஒரு வினாவிற்கு விடையாக ஒரு புள்ளடி மட்டுமே இடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துக. ஒரு வினாவிற்கு விடையாக ஒன்றிற்கு மேற்பட்ட புள்ளடிகள் இடப்பட்டிருப்பின் அவற்றைக் குறுக்கே வெட்டிவிடுக.

2. விடைகளுக்கு மேல் சரி, பிழை என்ற அடையாளத்தை இடாமல், அவ்விடைகளுக்கு எதிரே சரி, பிழை என்ற அடையாளத்தைத் தெளிவாக இடுக.

3. விடைகளைச் சரி, பிழை பார்ப்பதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்தியின் விடைத்தாளின் இலக்கங்கள் தெரியும் வண்ணம் வெட்டித் துளைத்தாள் ஒன்றைத் தயாரித்துக் கொள்க.

4. பரீட்சார்த்தியின் விடைத்தாளிலே விடைக்கூடுகளின் வரிசைகளுக்கு இடப்பக்கத்தில் சரி, பிழை என்னும் அடையாளத்தை இடுக.

5. ஒவ்வொரு வரிசைக்குக் கீழும் சரியான எண்ணிக்கையை இலக்கத்தில் எழுதுக.

6. ஒவ்வொரு வரிசைக்குக் கீழும் உள்ள எண்ணிக்கைகளின் மொத்தத்தைக் கூட்டி உரிய கூட்டினுள் எழுதுக.

7. சரியான விடைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு புள்ளி வீதம் கொடுக்கப்பட்ட புள்ளிகளை விடைத்தாளின் வலது பக்க கீழ் மூலையில், உரிய கூட்டினுள் இலக்கத்தில் எழுதுக. அப்புள்ளிகளே முதலாம் வினாத்தாளுக்குரிய மொத்தப்புள்ளி என்பதைக் காட்டுவதற்காக வலதுபக்க கூட்டினுள் எழுதவும்.

உதாரணம் $\frac{35}{40}$

8. முதலாம் வினாத்தாளிற்கான புள்ளிகளை இரண்டாம் வினாத்தாளுக்கு மாற்றும் போது மிக்க அவதானம் தேவை.
**முக்கிய குறிப்பு** :- பரீட்சார்த்திகள் சரியான விடையைக் குறிப்பதற்கு O என்பன போன்ற அடையாளங்களை கையாண்டாலோ, விடையளிப்பதற்குக் கொடுக்கப்பட்ட தாளிலன்றி விடையெழுதும் தாளில் எழுதினாலோ, விடைத்தாளில் விடையளித்தாலோ புள்ளி வழங்குக.

WWW.OLEVELAPI.COM



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

WWW.OLEVELAPI.COM



[ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**
Tamil Language and Literature I, II

03. 12. 2019 / 0830 - 1140

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

● **தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'சூழ மேதி இறங்கும் துறையில்' - இங்கு **மேதி** என்பது
(1) யானை (2) அன்னம் (3) எருமை (4) மான்

**2.** 'கோது இலான் இந்த மொழி கூறுதலும்' - இங்கு **கோது** என்பது
(1) செல்வம் (2) பாதுகாப்பு (3) அறிவு (4) குற்றம்

**3.** 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்' - இங்கு **தமர்** என்பதன் எதிர்க்கருத்து
(1) உறவினர் (2) பிறர் (3) பகைவர் (4) உற்றார்

**4.** 'சண்டமாருதம் அடித்து ஓய்ந்தது' - **சண்டமாருதம்** என்பதன் எதிர்க்கருத்து
(1) மந்தமாருதம் (2) அமைதி (3) சூறாவளி (4) கடும்புயல்

**5.** 'பெண்களுக்குத் தம்பதியே பெருந் தெய்வம் என்பர் சிலர்' - இங்கு **தம்பதி** என்பது
(1) கணவன் - மனைவி (2) தம்முடைய கணவன்
(3) தம்முடைய ஊர் (4) தாம்பத்திய வாழ்க்கை

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சொற்களின் இணைவு
(1) நெல் - அரிசி (2) கற்றாழை - சோறு
(3) அவரை - பருப்பு (4) தோடை - சதை

**7.** 'பக்குல் பறந்ததாகச் சிலமன் இல்லை'
'அந்தக் கோப்பு இருந்த சிலமன்கூட இல்லை' - இக்கூற்றுகளில் இடம்பெறும் **சிலமன்** என்னும் பேச்சுவழக்குச் சொல் உணர்த்தும் பொருள்
(1) காட்சி (2) கேள்வி (3) சாட்சி (4) அறிகுறி



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

**8.** **ஆபரணம், பாத்திரம், கப்பல்** என்னும் பொருள்களைத் தரும் சொல்
(1) அணி (2) ஆழி (3) கலம் (4) ஏனம்

**9.** 'உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல டிமான்ட் (Demand) இருக்கிறது' - **டிமான்ட்** என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) பெறுமதி (2) கேள்வி (3) மதிப்பு (4) தேவை

**10.** ஒருவரின் அறிவுக்கூர்மையைச் சுட்டுவதற்குக் கையாளப்படும் அருஞ்சொற்றொடர்
(1) ஒல்காப் பெரும்புகழ் (2) கருவிலே திருவுடையோன்
(3) நுண்மாண் நுழைபுலம் (4) சொல்லின் செல்வர்

**11.** நீண்ட காலம் வாழ்பவன்
(1) சஞ்சீவி (2) சிரஞ்சீவி
(3) அமரன் (4) அசகாயன்

**12.** ஆண் இனத்தை, கடுவன் என்ற சொல்லால் குறிக்கும் வழக்கம் **அற்ற** விலங்கு
(1) நாய் (2) குரங்கு (3) குதிரை (4) பூனை

**13.** 'இது சமநிலைக் கொள்கைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகிறது' - **உரைகல்** என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
(1) சான்று (2) உறுதி
(3) காட்சி (4) தெளிவு

**14.** நடக்கவிருக்கும் நாடகம், வரவேற்பு வைபவம் முதலானவற்றை ஒழுங்காக நடத்தும் நோக்கில் முன்கூட்டியே நிகழ்த்திப்பார்க்கும் செயற்பாடு
(1) அரங்கேற்றம் (2) வெள்ளோட்டம் (3) பரீட்சார்த்தம் (4) ஒத்திகை

**15.** ஒரு செயலைச் செய்வதற்குரிய அடிப்படைத் தகுதி இல்லாதவரால் அச்செயலைச் சிறிதேனும் செய்ய இயலாது என்பதைக் குறிக்கும் பழமொழி
(1) அச்சாணி இல்லாத்தேர் முச்சாணும் ஓடாது
(2) அச்சம் இல்லாதவன் அம்பலம் ஏறுவான்
(3) ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல்
(4) கனவிற் கண்ட பணம் செலவுக்கு உதவுமா ?

**16.** '**அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே**' என்ற பழமொழிமூலம் வலியுறுத்தப்படுவது
(1) நன்றியுணர்வு (2) துரோகத்தனம் (3) நிதானம் (4) நேர்மை

**17.** 'அது இப்படிக் காலைவாரியும் எனக்குப் புத்தி வரவில்லை' - **காலைவாருதல்** என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
(1) கால் இடறல் (2) ஏமாற்றுதல்
(3) காலூன்றல் (4) எதிர்த்துநிற்றல்

WWW.OLEVELAPI.COM

**18.** பின்வருவனவற்றுள் இணைமொழி
(1) ஆடியாடி (2) கன்னங்கரிய (3) ஓடியாடி (4) நெறுநெறு

**19.** (அ) அவர் நன்றாகப் படித்தவர்தான்.
(ஆ) மேடையில் ஏறிப் பேசுவதென்றால் அவருக்கு நடுக்கம்.
மேற்படி வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்
(1) ஆகவே (2) என்றாலும் (3) ஆதலால் (4) ஏனெனில்

**20.** பின்வருவனவற்றுள் பெயரடியாகப் பிறந்த **வினைச்சொல்**
(1) சித்திரித்தான் (2) பெற்றான் (3) காட்டினான் (4) வாழ்க



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** ககரம் 'g' என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
(1) கப்பல் (2) தேகம் (3) தங்கம் (4) சுகம்

**22.** இடைநிலை அமையப்பெற்ற பெயர்ப்பகுபதம்
(1) ஓடுதல் (2) மரங்கள் (3) கூத்தன் (4) அறிஞன்

**23.** பின்வருவனவற்றுள் வினையடை
(1) நடந்து (2) நேற்று (3) அழகான (4) வேகமான

**24.** பின்வருவனவற்றுள் வேற்றுமைத் தொகையாய் அமைந்த தொடர்
(1) குடும்பச் சொத்து (2) தேடிய சொத்து
(3) பொதுச் சொத்து (4) அழியாச் சொத்து

**25.** பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) மணியோசை (2) கடலலை (3) பூங்கொடி (4) மரவேர்

**26.** 'செத்த மாட்டில் உண்ணி கழன்றது போல' - இத்தொடரில் இடம்பெற்ற **வேற்றுமைப் பொருள்**
(1) இடம் (2) ஒப்பு (3) நீங்கல் (4) ஏது

**27.** 'சாலச் சிறந்தது' - இங்கு **சால** என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்
(1) பொருத்தம் (2) உறுதி (3) கூர்மை (4) மிகுதி

**28.** 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' - இங்கு **கற்றோர்** என்பது
(1) தொழிற்பெயர் (2) காரணப்பெயர்
(3) வினையாலணையும்பெயர் (4) ஆக்கப்பெயர்

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) அஃறிணை : மரம், செடி, குருவி
(2) ஆண்பால் : வந்தான், படித்தவன், நோயாளி
(3) பெண்பால் : மங்கை, தங்கை, வந்தாள்
(4) பலர்பால் : ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்

**30.** (1) உவமைத்தொகை : பால்நிலா, மதிமுகம், கயல்விழி
(2) உம்மைத்தொகை : வீடுவாசல், கோயில்குளம், சோறுகறி
(3) பண்புத்தொகை : வெண்சங்கு, நேர்கோடு, வட்டநிலா
(4) வினைத்தொகை : ஏவுகணை, சுடுசோறு, கடுகதி

● புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

WWW.OLEVELAPI.COM

**31.** வீதி அபிவிருத்தித் திட்டத்தால் தம் காணிகளை இழந்தவர்களுக்கு தக்க .................... வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.
(1) உதவி (2) இழப்பீடு
(3) காப்பீடு (4) அனுசரணை

**32.** நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அறிவித்தல் அரச .................... வெளியிடப்பட்டுள்ளது.
(1) சுற்றறிக்கையில் (2) சட்டமூலத்தில்
(3) வர்த்தமானியில் (4) விளம்பரத்தில்

**33.** ஜனாதிபதி தேர்தலுக்குரிய .................... தாக்கல் செய்வதற்கான முடிவுத்திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.
(1) பதிவு (2) விண்ணப்பம்
(3) வேட்புமனு (4) விஞ்ஞாபனம்



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**34.** எமது பாடசாலை தாபிக்கப்பெற்று ஐம்பது ஆண்டு நிறைவடைந்தமையைக் கொண்டாடுமுகமாக ..................... இடம்பெறவுள்ளது.

(1) வைரவிழா (2) மணிவிழா
(3) வெள்ளிவிழா (4) பொன்விழா

**35.** தேசிய ..................... காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள் எமது நாட்டின் வரலாறை உணர்த்திநிற்கின்றன.

(1) கலாபவனத்தில் (2) நூதனசாலையில்
(3) சுவடிகள் காப்பகத்தில் (4) காட்சிக்கூடத்தில்

**36.** ஆணைக்குழுவின் ..................... உயர்கல்வி விருத்திக்குப் பெரிதும் உதவும்.

(1) நிபந்தனைகள் (2) கோரிக்கைகள்
(3) பரிந்துரைகள் (4) பிரேரணைகள்

● கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

கிளையினிற் பாம்பு தொங்க
 விழுது என்று குரங்கு தொட்டு,
விளக்கினைத் தொட்ட பிள்ளை
 வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதொறும் குதித்துத் தாவி,
 கீழ் உள்ள விழுதை எல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணி எண்ணி,
 உச்சிபோய்த் தன் வால் பார்க்கும்

**37.** இக் கவிதை மூலம் கவிஞர் வாசகரிடம் ஏற்படுத்த முயலும் உணர்ச்சி

(1) அச்சம் (2) ஏமாற்றம் (3) நகைச்சுவை (4) திகைப்பு

**38.** 'விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல்' என்னும் உவமை கையாளப்பட்டதன் நோக்கம்

(1) விழுதின் தோற்றத்தை உணர்த்துதல் (2) குரங்கின் பதற்றத்தை உணர்த்துதல்
(3) குரங்கின் இயல்பை உணர்த்துதல் (4) பாம்பின் பயங்கரத்தை உணர்த்துதல்

**39.** இப்பாடல் விவரிக்கும் காட்சியோடு மிகப் பொருந்தி வரும் **பழமொழி**

(1) கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே.
(2) தலையிடியும் காய்ச்சலும் தனக்குவந்தால்தான் தெரியும்.
(3) மழைக்கால இருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது.
(4) மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

WWW.OLEVELAPI.COM

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - அவ்வகையாகத் தமிழிலே தோன்றிய முதலாவது காவியம் சிலப்பதிகாரமாகும்.
ஆ - காவியம் என்பது ஒரு பேரிலக்கிய வடிவமாகும்.
இ - அது இளங்கோவடிகளாற் பாடப்பட்டது.
ஈ - அது ஒரு கதையினை, தொடர்ச்சியாக அமையும் பல செய்யுள்களால் எடுத்துரைப்பது.
உ - அவரைப் போலவே சாத்தனார் மணிமேகலை என்ற காவியத்தைப் படைத்தார்.

(1) உ, அ, ஈ, இ, ஆ (2) இ, அ, ஆ, ஈ, உ
(3) ஆ, ஈ, அ, இ, உ (4) ஆ, இ, உ, ஈ, அ

* *



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

WWW.OLEVELAPI.COM



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 22 | විෂයය<br>பாடம் | தமிழ்மொழியும் இலக்கியமும் |
|---|---|---|---|

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 2 | 33. | 3 |
| 04. | 1 | 14. | 4 | 24. | 1 | 34. | 4 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 2 | 35. | 2 |
| 06. | 4 | 16. | 1 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 4 | 40. | 3 |

WWW.OLEVELAPI.COM

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව<br>சரியான விடைகளின் தொகை | 25 / 40 | I පත්‍රයේ මුළු ලකුණු<br>பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 25 / 40 |
|---|---|---|---|



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

# தமிழ்மொழியும் இலக்கியமும் - II

## வினா 01 - சுருக்கவிடை வினாக்கள்

1. சந்தி பிரித்து எழுதும் திறனை மதிப்பிடல்.
2. இலக்கண அறிவைப் பொருத்தமான இடத்தில் பிரயோகிக்கும் திறனை மதிப்பிடல்.
3. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதும் நுட்பங்களை மதிப்பிடல்.
4. மொழிவளம் தொடர்பான அறிவை மதிப்பிடல்.
5. குறியீடுகளைப் பொருத்தமான இடங்களில் இடுதலை மதிப்பிடல்.

## வினா 02 - கட்டுரை எழுதுதல்

1. கொடுக்கப்பட்ட வழிகாட்டற் குறிப்புக்களை அடியொற்றி, பொருட் பொருத்தமாகவும் தேவையான அளவுக்கும் உரிய தலையங்கம் இட்டும் கட்டுரை எழுதும் திறனை மதிப்பிடல்.
2. கருத்துக்களை ஒழுங்குபடுத்திக் கட்டுக் கோப்பாக வெளிப்படுத்தும் திறனை மதிப்பிடல்.
3. வழுக்களின்றியும் வளமான மொழிநடையிலும் எழுதும் ஆற்றலை மதிப்பிடல்.
4. விளக்கி எழுதும் திறன், கற்பனை ஆற்றலுடன் எழுதும் திறன், கருத்துக்களை வெளிப்படுத்தி உரையாடல் பாங்கில் எழுதும் திறன், விவாதித்து எழுதும் திறன், கதை எழுதும் திறன் ஆகியவற்றைக் கணிப்பிடல்.
5. கட்டுரை வகை, கட்டுரை அமைப்பு என்பவற்றை அனுசரித்து, எடுத்துக்கொண்ட விடயம் பற்றிக் கட்டுரை நிறைவு பெறும் வகையில் எழுதும் திறனைக் கணிப்பிடல்.
6. குறிப்பிட்ட சொற்களுக்குள் எழுதப்பட்டுள்ளதா என்பதைக் கணிப்பிடல்.

## வினா 03 - சுருக்கம் எழுதுதல்

1. உரைநடைப் பகுதியை வாசித்து கிரகித்து அதன் பிரதான கருத்து, துணைக்கருத்துக்கள் என்பவற்றை இனங்காணலை மதிப்பிடல்.
2. இனங்கண்ட கருத்துக்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் சொந்த மொழிநடையில் எழுதும் திறனை மதிப்பிடல்.
3. குறிப்பிட்ட அளவு சொற்களுக்குள் சாராம்சம் எழுதப்படுவதை மதிப்பிடல்.
4. உதாரணங்கள், மேற்கோள்கள், மேலதிக விளக்கங்கள், கூறியது கூறல் முதலியன சுருக்கத்தில் இடம்பெறக் கூடாது. இவற்றைத் தவிர்த்துச் சுருக்கம் எழுதப்பட்டுள்ளதா என அவதானித்து மதிப்பிடல்.
5. சுருக்கம் எழுத வேண்டிய முறையை அனுசரித்து எழுதுகின்றனரா என்பதைப் பரீட்சித்தல்.

## வினா 04 - கிரகித்தல்

WWW.OLEVELAPI.COM

பாடப்பகுதியினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளிக்கும் திறனை மதிப்பிடல்.

## வினா 05 - கடிதம் /துண்டுப்பிரசுரம் எழுதுதல்.

1. கடிதத்திற்கான / துண்டுப் பிரசுரம் எழுதுவதற்கான அமைப்பு முறையை அனுசரித்து எழுதுந் திறனை மதிப்பிடல்.
2. வழங்கப்பட்ட வழிகாட்டற் குறிப்புக்களைக் கருத்திற்கொண்டு கடிதம் / துண்டுப் பிரசுரம் எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சித்தல்.
3. மொழிநடையையும் வெளிப்பாட்டுத் திறனையும் மதிப்பிடல்.
4. குறிப்பிட்ட சொற்களுக்குள் எழுதப்பட்டுள்ளதா என்பதைக் கணிப்பிடல்.



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

# தமிழ்மொழியும் இலக்கியமும் - II

| | | |
|---|---|---|
| வினா இல. | 01. சுருக்க விடைகள் | - 20 புள்ளிகள் |
| | 02. கட்டுரை | - 25 புள்ளிகள் |
| | 03. சுருக்கம் | - 10 புள்ளிகள் |
| | 04. கிரகித்தல் | - 10 புள்ளிகள் |
| | 05. கடிதம் / துண்டுப்பிரசுரம் | - 15 புள்ளிகள் |
| | மொத்தம் | 80 புள்ளிகள் |

WWW.OLEVELAPI.COM



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

WWW.OLEVELAPI.COM



## பகுதி II

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) "உயர் குறிக்கோள், ஒருவர் உண்ணும் உணவினும் பருகும் நீரினும் அவருக்கு இனியது" - இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது ?

எழுவாய் – குறிக்கோள் / உயர் குறிக்கோள்

(ii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.

இந்தப் புத்தகம் இங்கு எப்படி வந்தது என்றேன்

" இந்தப் புத்தகம் இங்கு எப்படி வந்தது? " என்றேன்.

(iii) "இளங்கோ அடிகள், தமிழர் தழுவிய பழக்கவழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் கூறியுள்ளார்." மேற்படி செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

இளங்கோ அடிகளால் தமிழர் தழுவிய பழக்க வழக்கங்களும், வழிபாட்டு முறைகளும் கூறப்பட்டுள்ளன./ தமிழர் தழுவிய பழக்க வழக்கங்களும், வழிபாட்டு முறைகளும் இளங்கோ அடிகளால் கூறப்பட்டுள்ளன.

(iv) 'சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமற்றவை'
மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக.

சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமானவை / அவசியமானவை ஆகும்.

(v) கம்பன் இராம கதையைக் காவியமாகப் பாடினான்.
அதனால் கவிச்சக்கரவர்த்தி என்ற புகழைப் பெற்றான்.
இவ்விரு வாக்கியங்களில் கூறப்பட்ட விடயங்களை ஒரே வாக்கியத்தில் அடக்கி எழுதுக.

கம்பன் இராமகதையைக் காவியமாகப் பாடி/பாடியதால்/பாடியமையால்/பாடியதனால் கவிச்சக்கரவர்த்தி என்ற புகழைப் பெற்றான்.

(vi) "படிக்காத அந்தப் பையன் பரிதாபமாக நின்றான்" - இவ்வாக்கியத்தில் காணப்படும் பெயரெச்சம் யாது ?

பெயரெச்சம் – படிக்காத

WWW.OLEVELAPI.COM

(vii) பின்வரும் சொற்றொடரைச் சந்திபிரித்து எழுதுக.

கூனலிளம்பிறை

கூனல் + இளம் + பிறை
கூனல் + இளமை + பிறை



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

(viii) "நாம் பல்லாற் கடித்த தடயங்கள்கூட இருக்கின்றன" - இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது?

ஆல் உருபு

(ix) பின்வரும் வாக்கியத்திற் காணப்பெறும் திசைச்சொல் யாது ?

"நல்ல சினிமாவுக்கு சில அடிப்படை அளவுகோல்கள் உண்டு"

சினிமா

(x) "தங்கச்சி விரல் சூப்பிக்கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்தது" - பேச்சு வழக்கில் உள்ள இந்த வாக்கியத்தை எழுத்து வழக்கில் திருத்தி எழுதுக.

தங்கை / தங்கைச்சி / தங்கச்சி விரல் சூப்பிக்கொண்டு அங்குமிங்கும் ஓடித் திரிந்தாள்.

(02 x 10 = 20 புள்ளிகள்)

**வினா இல. 02 புள்ளித்திட்டம்**

| | | |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **25 புள்ளிகள்** |

**பொருளமைவும் அளவும்**

அறிவுறுத்தல்கள், வழிகாட்டற் குறிப்புகள் என்பவற்றை அனுசரித்து பொருட்பொருத்தத்துடன் கேட்கப்பட்ட சொல் அளவில் கட்டுக்கோப்பாக எழுதப்படல். கருத்துக்களில் தொடர்ச்சி காணப்படல்.

**கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்**

கருத்துக்களை தெளிவாக எடுத்துரைத்தல்.
பொருத்தமான மொழிப்பிரயோகம்.
சொல், வாக்கியம் எழுத்து வழுக்கள் இன்மை.
தேவைப்படுமிடத்து பொருத்தமான உதாரணங்கள், மேற்கோள்கள், ஆதாரங்கள் தந்து எழுதுதல்.

WWW.OLEVELAPI.COM

**எழுத்து நுட்பங்கள்**

பந்தியமைப்பு, பந்திகளுக்கிடையே தொடர்புடைமை, குறியீடுகள் இடப்படல், உறுப்பமைவு, நேர்த்தி.

**தலையங்கம்**

பொருத்தம், சுருக்கம், கவர்ச்சி.

புள்ளியிடல்

$$\text{உ+ம் } Q2 = \frac{08}{12} + \frac{04}{06} + \frac{03}{05} + \frac{02}{02} = \frac{17}{25}$$

மேற்குறிப்பிட்ட 4 அம்சங்களின்கீழ் புள்ளிகளைப் பகுத்து வழங்குக.



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) 'உலகின் நுரையீரல்' எனப்படும் அமேசன் காடு அண்மைக்காலத்தில் பல தினங்களாகத் தொடர்ந்து எரிந்தது. அதனால் மரங்கள் ஏராளமாக அழிந்தன; வன விலங்குகள் மடிந்தன; சுற்றுச் சூழல் மாசடைந்தது. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட இப்பாதிப்புகள் வனவளத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு வன்மையாக உணர்த்தியுள்ளன. அவ்வகையில், வனவளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம், பாதுகாக்கப்படாவிட்டால் ஏற்படும் தீமைகள் முதலானவற்றை விவரிக்கும் ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) அண்மையில் நீர் கலந்துகொண்ட கல்விச் சுற்றுலாவின்போது தரிசித்த இடங்கள், கவின்மிகு காட்சிகள், சந்தித்த சமூகத்தவர்கள், அவர்களோடு பேசிப் பழகிப் பெற்ற அனுபவங்கள் முதலானவை உமது கல்விக்கும் பொது அறிவுக்கும் உதவுவனவாக அமைந்தன. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பதான ஒரு **விவரணக் கட்டுரை.**

(iii) சிறந்த ஆளுமை உடையவர்களாலேயே வாழ்க்கையில் உயர்நிலை அடைய முடியும். ஆளுமை என்பது பன்முகப்பட்ட ஆற்றல்களின் தொகுதியாகும். ஆதலால் ஒருவன் ஆளுமை உடையவனாய் இருப்பது அவன் பெற்ற கல்வித் தகைமைகளால் மாத்திரம் சாத்தியப்படாது. பாடவிதானத்துக்கு அப்பால் கலை, இலக்கியம், விளையாட்டு முதலான துறைகளிலும் பரிச்சயம் உடையவனாய் இருத்தல் வேண்டும். அதை உணராது ஏனைய விடயங்களில் ஈடுபடுவது படிப்பைப் பாழாக்கிவிடும் என்ற கொள்கை உடைய மாணவன் ஒருவனுக்கும் அவ்வாறன்றி கல்வியிற் போலவே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதே உயர்வுக்கு வழிவகுக்கும் என்ற கொள்கை உடைய மாணவன் ஒருவனுக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) முயற்சி உடையவர்கள் ஒருபோதும் தாழ்ச்சி அடையமாட்டார்கள். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பது பழமொழி. விடாமுயற்சியால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. 'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழியும் அதைத்தான் வலியுறுத்துகிறது. அடிமட்டத்திலிருந்து தம் முயற்சியால் முன்னேறியவர்களின் அனுபவ மொழிகள் இவை. அவ்வாறாக தன் முயற்சியால் வாழ்வின் உச்சத்தைத் தொட்ட ஒருவரின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

i.

தலைப்பு : வனவளம் காப்போம் / வனவளத்தின் முக்கியத்துவம் / வனவளம் அழிக்கப்படுவதால் உண்டாகும் தீமைகள் (இவை போன்றவை)

- மனிதர்கள் தமது குறுகிய தேவைகளுக்காகக் காடுகளை அழிக்கின்றனர்.
  - பயிர் செய்தல்
  - குளங்களை அமைத்தல்
  - மரங்களை விற்பனை செய்தல்
  - விறகுத் தேவை

WWW.OLEVELAPI.COM

- காடுகளின் பயன்கள்
  - மனித சுவாசத்திற்குத் தேவையான ஒட்சிசனை வழங்குதல்
  - உயிரினங்களின் புகலிடமாக அமைதல்
  - மழை வளம் தருதல்
  - வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்துதல்
  - மண்ணரிப்பினைத் தடைசெய்தல்
- காடுகள் அழிக்கப்படுவதனால் ஏற்படுந் தீமைகள்
  - சுற்றுச்சூழல் மாசடைதல்



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

- மழைவளம் இல்லாது போதல்
- உயிரினங்கள் அழிந்து போதல்
- நாட்டு வளமும் பொருளாதாரமும் குன்றிப் போதல்

- வனவளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம்

ii.

தலைப்பு : நான் சென்ற கல்விச் சுற்றுலா / கல்விச் சுற்றுலாவும் கற்ற பாடங்களும் (இவை போன்றவை)

- சென்ற இடம், காலம் பற்றிய தரவுகள்
- சுற்றுலா சென்றதற்கான நோக்கம்
- அழைத்துச் சென்றோர், உடன்வந்தோர் விபரங்கள்
- சுற்றுலாவின் போது பார்த்தவை
  - இடங்கள்
  - காட்சிகள்
- சுற்றுலாவின் போது சந்தித்தோர்
- இடங்களையும் மனிதர்களையும் சந்தித்துப் பெற்ற அனுபவங்கள் கல்விக்கும் பொது அறிவுக்கும் உதவுமாற்றை விவரித்தல்.
- பாட அலகுகளை விளங்கிக் கொள்ள சுற்றுலா எவ்வாறு உதவியது என விவரித்தல்.
- மேலும் சுற்றுலா செல்லும் விருப்பை வெளியிடல்.

iii.

தலைப்பு:

- படித்தால் மட்டும் போதுமா? / ஆளுமை விருத்திக்கு அவசியமானவை / கல்வியும் ஆளுமை விருத்தியும் (இவை போன்றவை)

- இணைப்பாட விதானச் செயற்பாடுகள் படிப்பைப் பாழாக்கும் எனும் மாணவன் முன்வைக்கும் கருத்துகள்
  - அறிவு பெற உதவுகின்ற
  - தராதரம் உடையனவாக்குகின்ற
  - தொழில் சார்ந்த அறிவு தருகின்ற
  - விழுமியப் பண்புகளைத் தருகின்ற
  - ஆளுமை விருத்திக்கு உதவுகின்ற
  - கௌரவமான வாழ்க்கைக்கு அத்திவாரமாகின்ற கல்வியை
  - நேரவிரயம்
  - உடற்சோர்வு
  - கவனச் சிதறல்

முதலான காரணங்களால் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பாதிக்கின்றன.

- இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும் எனும் மாணவன் முன்வைக்கும் கருத்துகள் கல்வியோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடுவது பின்வரும் நலன்களைத் தரும்
  - ஆளுமையை விருத்தி செய்வது
  - கூட்டுணர்வைத் தருவது
  - தலைமைதாங்கும் பண்பை வளர்ப்பது.
  - தொழில் வாய்ப்புக்கு அனுசரணையாக விளங்குவது
  - பரஸ்பரம் புரிந்துணர்வை வளர்ப்பது

  (இவை போன்றவை)

WWW.OLEVELAPI.COM



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

- உரையாடலில் இருவர் பங்குபற்றியிருத்தல் வேண்டும்.
- உரையாடல் அமைப்பில் இருத்தல் வேண்டும்.
- ஒருவர் கருத்தை இன்னொருவர் உள்வாங்கி தர்க்க ரீதியாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
- உரையாடல் தொடர்ச்சியுடையதாக இருத்தல் வேண்டும்.

iv.

தலைப்பு:

- விடாமுயற்சி வெற்றி தரும் / முயற்சி திருவினையாக்கும் / முயன்றால் முன்னேறலாம் / முயன்றால் முடியாதது இல்லை.(இவை போன்றவை)

- சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல்.
- வழங்கப்பட்ட கருப்பொளுக்கு அமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்.
- கதையைச் சுவை படவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தப் போக்கில் நகர்த்திச் செல்லுதல்.
- கதைக்குப் பொருத்தமான மொழிநடையைப் பயன்படுத்துதல்.
- இயல்பான பாத்திர உரையாடலைக் கையாளுதல்.
- படிப்பினையை மறைமுகமாக வெளியிடல்.
- முடிவு பொருத்தமாக அமைதல்.

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

இன்றைய கால கட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகிவிட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கி விட்டமைக்கும், நெருங்கி விட்டமைக்கும் இத் தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக் காரணமாகிவிட்டது எனலாம்.

பழமை மிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்), தொலைப் பதிவு (டெலக்ஸ்), மின்னஞ்சல் (ஈமெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப்படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்றுவிட்டபோதும், மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்தத் தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும், உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக்கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும், தேவைகளின் போதும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக் கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சமவயது உடையோருடனோ இருக்கலாம்; நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி, வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம், தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

(10 புள்ளிகள்)



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

சுருக்கம்

- இன்று தொடர்பாடல் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடு.
- முழு உலகுமே சுருங்கி நெருங்கியமைக்கு தொடர்பாடல் விருத்தியே காரணம்.
- பல்வேறு ஊடகங்கள் தோன்றியிருப்பினும் மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பு எல்லாவற்றிலும் மேலானது.
- வியத்தகு சாதனைகளைப் படைக்கும் மனிதன் தொடர்பாடலைப் பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு உறவாடும் தன்மைகளை வளர்த்தல் அவசியம்.
- எக்காலத்தும் எவ்விடத்தும் பல்வகைப்பட்டவர்களுடன் திறம்பட தொடர்பாடும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்க்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| விடய உள்ளடக்கம் | - | 06 புள்ளிகள் |
| சொல்லளவு | - | 02 புள்ளிகள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

- 40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.
- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.
- சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.
- சொற்களை எண்ணும்போது நிதானமாகக் கணக்கிடவும்.

WWW.OLEVELAPI.COM



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**4.** பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பழந்தமிழ் இலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தைக் கவரும் சிறந்த பண்பு 'ஒன்றே உலகம்' எனும் உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அறிஞர் எழுதி வெளியிட்ட 'ஒரே உலகம்' (One World) என்னும் நூலை மக்கள் இனிதாக வரவேற்றனர். இந்நூற் கருத்தானது உலகம் தழுவியதாக இருந்ததால் இருபதாம் நூற்றாண்டில் ஏனையோர்க்குப் பெரு மகிழ்வு அளித்தது. இதுபற்றி, தமிழராகிய நாம் சிறுபுன்முறுவல் அரும்பி நிற்கிறோம். ஏன் ? இருபது நூற்றாண்டுகட்கு முன்னமே தமிழறிஞர் இதனை இனிது உணர்ந்திருந்தனர். இதற்கு, 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' எனும் பாடல் இடம்பெறும் புறநானூறு தக்க சான்றாகும். இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது ? பிறநாட்டினருடனான வணிகத்தின் பயனாகவும், மூவேந்தருடன் பிறநாட்டு மன்னர்க்கு உண்டான தொடர்பின் பயனாகவுமே பழந்தமிழர்க்கு இப்பரந்த மனப்பான்மை வாய்த்ததெனலாம்.

மேலே எடுத்துக்காட்டிய ஒருலக மனப்பான்மையும், அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும் மற்றொரு சிறந்த பண்புக்குக் காரணமாயின. இது கண்ணோட்டம் எனப்படும். இதனைப் பொறை எனலும் பொருந்தும். தமிழ்மொழி வரலாறு, நம் மக்களின் ஒப்பற்ற சமயப் பொறைக்குச் சான்றாக அமைந்துள்ளது. இலத்தீன் மொழி மேல்நாட்டுச் சமயங்களின் மொழி. சமஸ்கிருதம் இந்தியச் சமயங்களின் மொழி. ஆனால், பல சமயத்தவர்களும் உரிமை பாராட்டும் சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு.

(i) 'ஒன்றே உலகம்' எனும் மனப்பான்மையைத் தமிழர் பழங்காலத்திலேயே பெற்றிருந்தமைக்கு ஆதாரமாக அமைந்த நூல் யாது ?

(ii) இம்மனப்பான்மையை, பழந்தமிழர் பெற்றுக்கொண்டமைக்கான காரணங்களாகக் கட்டுரையாசிரியர் எவற்றைக் கருதுகிறார் ?

(iii) பொறை எனும் பண்புக்கு அடிப்படைகளாக அமைந்தவை எவை ?

(iv) பிறமொழிகளோடு ஒப்பிட்டு, தமிழ்மொழியின் எச்சிறப்பை ஆசிரியர் பாராட்டுகின்றார் ?

(v) தமிழரிடம் சிறுநகை தோன்றுவதற்கான காரணம் யாது ?

i. புறநானூறு

ii. பிற நாட்டினருடனான வணிகம்
மூவேந்தர்களுடன் பிறநாட்டு மன்னர்க்கு உண்டான தொடர்பு

iii. ஒருலக மனப்பான்மையும் அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும்

iv. பல சமயத்தவர்களும் உரிமை பாராட்டும் சிறப்பு

WWW.OLEVELAPI.COM

v. இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்க அறிஞர் வெளியிட்ட உலகம் தழுவியதான கருத்தினை, இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழறிஞர் கூறிவிட்டனர் என்ற நினைப்பு.

(02 x 05 = 10 புள்ளிகள்)



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**5.** பொன்னகரம் பிரதேசத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானமானது நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதுள்ளது. இதனால் இளைஞர்கள் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. அப்பிரதேச இளைஞர் மன்றத்தின் செயலாளர் க. தேவகுமாரன் என உங்களைக் கருதிக்கொண்டு, மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரி பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியதாக, பொன்னகர பிரதேச செயலாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

- ✳ மைதானத்தின் தற்போதைய நிலை
- ✳ அதனால் இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு
- ✳ புனரமைப்பதால் ஏற்படும் நன்மைகள்

**அல்லது**

இலாபமீட்டுதலைக் கருதி விவசாயத்துறையில் இரசாயன உரங்களின் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் நாம் உண்ணும் உணவில் நச்சுத்தன்மை மிகுந்துள்ளது. இவ்வுணவுப் பாவனையால் புற்றுநோய் முதலிய கொடுநோய்கள் மனித சமுதாயத்தில் பெருகிவருகின்றன. எனவே, இவற்றிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கு மீண்டும் இயற்கை உணவை நோக்கிச் செல்லுவதன் தேவையை வலியுறுத்தி, அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சோழியபுரம் இளம் விஞ்ஞானிகள் சங்கத்தின் சார்பில் **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

**கடிதம**

- அமைப்பு - 05 புள்ளிகள்
- உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
- மொழிநடை - 03 புள்ளிகள்

**மொத்தம் - 15 புள்ளிகள்**

◆ அமைப்பு
- முகவரி - 01 புள்ளி
- உள்முகவரி - 01 புள்ளி
- விளிப்பு - 01 புள்ளி
- தலைப்பு - 01 புள்ளி
- பதவி, ஒப்பம் - 01 புள்ளி

05 புள்ளிகள்

(தரப்பட்ட தரவுகளுக்கு அமைய முகவரி முதலானவை அமைதல் வேண்டும்)

◆ உள்ளடக்கம்

விளையாட்டு மைதானத்தின் தற்போதைய நிலை
- மழைக் காலத்தில் நீர் தேங்கி நிற்றல் முதலானவை.
- புற்கள், செடிகொடிகள் நிறைந்திருத்தல்.
- கால் நடைகளின் உறைவிடமாகக் காணப்படல்.
- பார்வையாளர் பகுதி பராமரிப்பின்றி சேதமடைந்து காணப்படல்.
- கழிவுகள் வீசும் இடமாக மாறி வருதல்.

(இவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ பொருத்தமான வகையில் எழுதுதல்)

இளைஞர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு
- பல்வேறு வகையான விளையாட்டுக்களில் பயிற்சி பெற முடியாதிருத்தல்.
- தேசிய மட்டம், சர்வதேச மட்டப் போட்டிகளுக்குச் செல்வதில் தடைகள் ஏற்படல்.
- இளைஞர்களின் இளமைத்துடிப்பும், உணர்வும் மழுங்கடிக்கப்படல்.

(இவை போன்றன)

WWW.OLEVELAPI.COM



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

புனரமைப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள்
- பயிற்சி பெற வாய்ப்பேற்படுதல்.
- திறமையானவர்கள் வெளிக் கொணரப்படல்.
- இளைஞர்கள் உடல், உள ரீதியாக உற்சாகம் அடைதல்.
- வெற்றி தோல்விகளைச் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வளர்தல்.
- கூட்டுணர்வு ஏற்படல்.
- தேசிய மட்டம், சர்வதேச மட்டப் போட்டிகளுக்குச் செல்லல்.

◆ மொழிநடை
  - பொருத்தமான மொழிநடை
  - நிறுத்தக் குறிப்பிரயோகம்
  - வழுக்கள் இன்மை
  - சுட்டிப்பாகக் கூறுதல்

(15 புள்ளிகள்)

அல்லது

**துண்டுப்பிரசுரம்**

| | | | |
|---|---|---|---|
| - | அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| - | உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| - | மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **-** | **15 புள்ளிகள்** |

◆ அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| - | கவர்ச்சிகரமான தலைப்பு | - | 02 புள்ளிகள் |
| - | விளிப்பு | - | 01 புள்ளி |
| - | வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும் | - | 02 புள்ளிகள் |
| | | **-** | **05 புள்ளிகள்** |

(தரப்பட்ட தகவல்களுக்கு அமைய வெளியிடுபவர் விபரம் அமைதல் வேண்டும்)

◆ உள்ளடக்கம்
  - விவசாயத்துறை தற்போது இலாபநோக்கம் கருதிய துறையாக மாறி விட்டிருத்தல்.
  - உரப்பாவனை அதிகரித்துக் காணப்படல்.
  - உணவில் நச்சுத்தன்மை அதிகரித்திருத்தல்.
  - புற்று நோய் முதலியவை ஏற்பட்டுப் பெருகி வருதல்.
  - இயற்கை உணவை உண்பதை வலியுறுத்தல்.
  - மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

WWW.OLEVELAPI.COM

◆ மொழிநடை
  - கவர்ச்சியான மொழி நடை.
  - பொதுமக்களை விளித்து எழுதுதல்.
  - சூழ்நிலையின் அபாயத்தை வெளிப்படுத்தல்.
  - சொற்செறிவு.

(15 புள்ளிகள்)



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

# தமிழ்மொழியும் இலக்கியமும் III

**நோக்கங்கள்**

1. இலக்கியப் பகுதிகளை நுட்பமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை மதிப்பிடல்.
2. இலக்கியப் பகுதிகள் தொடர்பாக வினவப்படும் சுருக்கவிடை வினாக்களுக்கு பொருத்தமானதாகவும் சுட்டிப்பாகவும் விடை எழுதும் திறனை மதிப்பிடல்.
3. செய்யுட்பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் பொருளை இலகுவான உரைநடையில் எழுதும் திறனை மதிப்பிடல்.
4. செய்யுள்களில் மற்றும் உரைநடைப் பகுதிகளில் இடம்பெறும் சொற்றொடர்களின் சிறப்புக்களை விளக்கும் திறனை மதிப்பிடல்.
5. இலக்கியப் பாடப்பகுதிகளை விளங்கிச் சுவைத்து அப்பகுதிகளிற் கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளிக்கும் ஆற்றலை மதிப்பிடல்.
6. பொருத்தமான மேற்கோள்கள் ஆதாரங்கள் என்பவற்றைக் காட்டி விடையெழுதுந் திறனை மதிப்பிடல்.
7. இலக்கிய இரசனையைப் பரீட்சித்தல்.

**புள்ளித்திட்டம்**

**கட்டாய வினாக்கள்**

வினா 01 சுருக்க விடைகள் 02 x 10 = 20 புள்ளிகள்

வினா 02 செய்யுள் + உரைநடை

I, II, III, IV, V ஒவ்வொன்றுக்கும் பின்வருமாறு புள்ளி வழங்குக.

(அ) 02 புள்ளிகள்

(ஆ) 02 புள்ளிகள்

**மொத்தம் 04 புள்ளிகள்**

04 x 05 = 20 புள்ளிகள்

வினா 03 15 புள்ளிகள்

வினா 04 15 புள்ளிகள்

**தெரிவு வினாக்கள்**

WWW.OLEVELAPI.COM

வினா 05, 06, 07 (ஏதேனும் ஒன்று) 10 புள்ளிகள்

**மொத்தம் 80 புள்ளிகள்**



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 | T | III**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

**03. 12. 2019 / 1300 - 1500**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**
- ✳ அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✳ **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "கணக்காயரில்லாதவூரும் பிணக்கறுக்கு மூத்தோரையில்லா வவைக் களனும்"

(அ) இங்கே 'மூத்தோர்' என்போர் யார் ?

(ஆ) 'அவைக்களன்' என்பதன் பொருள் யாது ?

(ii) "வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்" - இங்கு

(அ) வானரம் என்பது யாது ?

(ஆ) மந்தி என்பது யாது ?

(iii) "இன்பப்பயன் காணச் செய்கின்ற இலட்சியம், சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது."

(அ) இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது ?

(ஆ) இங்கு உடலாகவும் உயிராகவும் கருதப்படுபவை யாவை ?

(iv) "மாமி மகளே என்ர மருதங்கிளி வங்கிசமே ஏலங்கிராம்பே"

(அ) 'வங்கிசம்' என்பது எதனைக் குறிக்கிறது ?

(ஆ) 'கிராம்பே' என்பதை எழுத்து வழக்கில் தருக.

(v) "கொற்றத்தார்க் குரிசில் இவர் யார் ?"

(அ) இவ்வாறு வினவியவர் யார் ?

(ஆ) 'கொற்றத்தார்க் குரிசில்' எனக் குறிப்பிடப்படுபவர் யார் ?

(vi) "திணிமணற் செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇ"

(அ) இங்கு குறிப்பிடப்படும் விளையாட்டு யாது ?

(ஆ) இங்கு குறிப்பிடப்படும் பாவை எதனால் ஆக்கப்படுகிறது ?



WWW.OLEVELAPI.COM
අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

(vii) "அங்கப்பாரு மனே உன்ட மூத்த வாப்பா தலய, சூப்பின பனங்கொட்ட மாதிரி"

(அ) 'மூத்த வாப்பா' எனக் குறிக்கும் உறவுப் பெயருக்குச் சமனான வேறு பெயர் யாது ?

(ஆ) இதில் இடம்பெற்ற அணி யாது ?

(viii) "நெஞ்சகத்தை நிறைத்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதி தன் துணைவியர்கள் சூழவரும் கோலம்"

(அ) இங்கு களங்கமின்மையை உணர்த்தும் சொல் யாது ?

(ஆ) 'துணைவியர்கள்' என்று குறிப்பிடப்படுபவை யாவை ?

(ix) "நண்பர் 486 கம்பியூட்டர், 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்"

(அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரபந்தம் யாது ?

(ஆ) உச்சாடனம் செய்தல் என்பதன்மூலம் உணர்த்தப்படுவது யாது ?

(x) "முந்து ஊர் வெம் பணிக்கொடியோன் மூதூரில்"

(அ) இங்கு 'பணிக்கொடி' என்பது எதனைக் குறிக்கிறது ?

(ஆ) இங்கு 'மூதூர்' எனக் குறிப்பிடப்படுவது யாது ?

## பகுதி III

01. சுருக்கமான விடை தருக.

i. அ. அறிவுடையோர் / அறிவும் அனுபவமும் உடையோர் / அறிஞர்
ஆ. சபை / சபை கூடும் இடம் / அவை

ii. அ. ஆண் குரங்கு
ஆ. பெண் குரங்கு

iii. அ. உருவக அணி
ஆ. 1. சமூகம்
2. இலட்சியம்

WWW.OLEVELAPI.COM

iv. அ. பரம்பரை / வம்சம் / குடும்பம்
ஆ. கராம்பு/ கிராம்பு

v. அ. குகன்
ஆ. பரதன்

vi. அ. பாவை விளையாட்டு / வண்டற்பாவை விளையாட்டு
ஆ. மணல் / மண் / வண்டல்

vii. அ. பாட்டன் / தாத்தா / பேரன்
ஆ. உவமையணி



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

viii.அ. நிர்மலம்

ஆ. நட்சத்திரங்கள்

ix. அ. பரணி

ஆ. மீண்டும் மீண்டும் கூறல்

தொடர்ந்து கூறல்

x. அ. பாம்புக் கொடி

ஆ. அஸ்தினாபுரம் / குருநாடு

(2 x 10 = 20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை

(அ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதுமொழி வலியுறுத்தும் உண்மை யாது ?

(ஆ) அதை வலியுறுத்துவதற்கு கவிஞர் தரும் எடுத்துக்காட்டுகள் யாவை ?

(ii) கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே

(அ) காளமேகப் புலவரது கவிபாடும் திறம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ?

(ஆ) 'நன்னூலாங் கடலினுண்டு' என்ற தொடரில் பயின்றுள்ள அணியை விளக்குக.

(iii) முழங்கு திரைப் புனலருவி கழங்கெனமுத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்
வளம் பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே

(அ) குற்றால மலையின் நீர்வளம் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது ?

(ஆ) 'தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்' - என்பதனூடாக உணர்த்தப்படுவது யாது ?



WWW.OLEVELAPI.COM
අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

(iv) பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' அந்தச்சபையில் நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்லக் கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்துவிட்டார்கள். தபால் தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. "ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்" என்றார் நாவலர் அவர்கள்.

(அ) அங்கு நிலவிய அமைதி கட்டுரையாசிரியரால் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ?

(ஆ) நாவலரது தன்னம்பிக்கை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது ?

(v) அன்றிலிருந்து புகையிலைக்கன்றுக்குப் பாத்தி கட்டுவதுபோல கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும், இன்னொரு பகுதியில் மனைவியும், மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம். எங்கள் படைப்புகளை இந்த வரப்புக்குள் வைத்துக் கொண்டோம். ஆரம்பத்தில் எனக்குக் கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஓர் இணக்கம் ஏற்பட்டது. அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடத் தொடங்கியது.

(அ) கம்பியூட்டரை இலகுவாகப் பயன்படுத்துவதற்குத் தான் கையாண்ட உத்தியை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார் ?

(ஆ) 'சூட்சுமத்தையெல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடத் தொடங்கியது' எனும் வாக்கியத்தால் விளங்கிக்கொள்ளக்கூடியது யாது ?

(20 புள்ளிகள்)

02.

i. அ. மன நிறைவு / மனத்திருப்தி / திருப்தி

ஆ. 1. உப்பில்லாக் கஞ்சியை அறுசுவை போல உண்ணல்.
2. தப்பிய கந்தையை பட்டாடை போல அணிதல்.
3. பனையோலைப் பாயினை மேலான படுக்கையாக எண்ணி உறங்குதல்.

ii. அ. கழிக்க வேண்டிய பிழையான பொருள்களை விலக்கி, நல்ல நூல்களாகிய கடலிலிருந்து பெறத்தக்கவற்றை பெற்று, தமிழுக்கு இருப்பிடமான பொதிகை மலையிலே நிலைகொண்டு அழகிய கவிதைகளைப் பாடுகின்ற புலவர்கள் பயப்படும்படியாக ஆரவாரத்தோடு எந்த நேரத்திலும் கவிதை மழை பொழிபவர்.

ஆ. உருவக அணி WWW.OLEVELAPI.COM
நல்ல நூல்கள் கடலாக உருவகிக்கப்பட்டுள்ளன.

iii. அ. - முழக்கமிடும் அலைகளையுடைய அருவியானது கழங்கு விளையாடுவது போல முத்துக்களை வாரிக் கொண்டு செல்லுதல்
- அருவி நீர் பெருகி குறவர் இல்லங்களின் முற்றம் தோறும், பரந்து, பெண்கள் மண்ணினால் செய்த சிறு வீடுகளை அடித்துச் செல்லுதல்

ஆ. மலையினுடைய உயர்ச்சி / சண்பக மலர் வாசனையின் சிறப்பு

iv. அ. - பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' என்பதன் மூலம்
- பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை என்பதன் மூலம்



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

ஆ. "ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் " என நாவலர் கூறியதனூடாக

V. அ. புகையிலைக் கன்றுக்குப் பாத்தி கட்டுவது போல கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து படைப்புகளை எல்லைப்படுத்தி வைத்துக் கொண்டோம் என்பதினூடாக

ஆ. கம்பியூட்டர் பற்றிய தொழில்நுட்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பரிச்சயமாதல்

($4 \times 5 = 20$ புள்ளிகள்)

**3.** **குகப்படலத்தில்,**

(அ) பரதனின் துயரம்

(ஆ) சுமித்திரையதும் இலக்குவனதும் புகழ்

என்பன விவரிக்கப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்,**

(அ) தருமன்

(ஆ) வீமன்

ஆகியோர் போர் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களை விளக்குக. (15 புள்ளிகள்)

அ.

- பரதனின் கூற்றுக்களூடாகப் பரதனின் துயர நிலை காட்டப்படுதல்
  - இராமனை மகனாகப் பெற்றதால் கோசலை பெறவேண்டிய அரசுச் செல்வத்தை தான் பிறந்த காரணத்தால் இழந்த பெருமைக்குரியவள் என பரதன் குற்றவுணர்ச்சியுடன் கூறுதல்.
  - கைகேயியின் பாழான தீவினையுடைய வயிற்றிலே நீண்ட நாட்கள் தங்கியிருத்தலால் உயிராகிய சுமை குறைந்து தேய்தல் எனல்.
- கவிக் கூற்றினுடாகப் பரதனின் துயரநிலை காட்டப்படல்
  - "தோன்றல் துயர்க் கடலினேக......"
- கோசலையின் கூற்றினுடாகப் பரதனின் துயர நிலை காட்டப்படுதல்.
  - "நைவீர் அலீர் மைந்தீர் இனித்துயரால்......."
- இராமனுடன் சேர்ந்து செல்லும் பேறு பெற்ற இலக்குவனுடன் ஒப்பிட்டு, தன்னிலை குறித்து வருந்துதல்.
  - "இராமன் பின்பு பிறந்தானும் என்னப் பிரியாதான் ......."

(08 புள்ளிகள்)

**ஆ. சுமித்திரை :**

- அறமே வடிவெடுத்து வந்தவள் என்று சொல்லத்தக்கவள்.
- அன்பால் நிறைந்தவள்.
- சத்தியத்தை நிலைபெறச் செய்து இறந்த தசரதனின் இளைய பட்டத்தரசி.
- இராமனை விட்டுப் பிரியாத இலக்குவனைப் பெற்றெடுத்த பெரியாள்.



WWW.OLEVELAPI.COM
අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**இலக்குவன் :**

- யாவராலும் தொழத்தக்க இராமனின் பின்பு பிறந்தவன்.
- "இராமனுக்குத் தம்பி" எனத் தெரியும் படியாக இராமனை என்றைக்கும் விட்டுப் பிரியாதவன்.

(07 புள்ளிகள்)

(08+07= 15 புள்ளிகள்)

**அல்லது**

**அ. தருமன் :**

போர் செய்வதில் உடன்பாடில்லை. போரினால் அழிவு ஏற்படுமாதலால் போரை விடச் சமாதானமே சிறந்தது; தவிர்க்க முடியாதவிடத்து போர் செய்யலாம் என்பதே அவரது கருத்தாகும்.

- பகையை வளர்த்துப் போர் செய்தால் துரியோதனன் ஆகியோரோடு நாமும் மடிந்து விடுவோம் எனல்.
- சான்றோரையும் உறவினர்களையும் தம்பியர்களையும் போர் செய்து அழித்துப் பெறுகின்ற ஆட்சியை வெறுத்தல்.
- சமாதானமாகச் சென்று குரு நாட்டின் பாகத்தைத் தரும் படி கேட்டு, துரியோதனன் தர மறுத்தால் ஐந்து ஊர்கள், ஐந்து இல்லங்கள் எனக் கேட்டு அதையும் தர மறுத்தால் பின் போர் புரிய உடன்படல் .
- நிலத்திற்காகப் போர் செய்வது இருவருக்கும் பழியை ஏற்படுத்தும் எனல்.
- பொருதொழிலும் கடை நிலத்தில் கிடந்ததே – போர், மன்னர்களால் இறுதியாகக் கையாளப்பட வேண்டிய உபாயம் எனல்.
- சமாதான வழியில் செல்வதற்கு வீமனையும் தூண்டுதல்.

(07 புள்ளிகள்)

**ஆ. வீமன் :**

தருமனுக்கு எதிரிடையான எண்ணமுள்ளவனாகக் காணப்படுகின்றான். போர் ஒன்றே தீர்வு என்ற உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவன்.

- கௌரவர் மீது கடுஞ் சினங் கொண்டு போரை விரும்பும் வீமனுக்கு, போரைத் தவிர்க்கும் தருமனின் மீது வெறுப்பும் கோபமும் ஏற்படல்.
  - மானம் இல்லாதவன் என தருமனை ஏசுதல்
- தருமனின் அருளுக்கு அஞ்சுவதாகக் கூறுதல்.
- போர் செய்து வெற்றிபெறுவது உறுதி எனல்.
- நாடு முழுவதையும் தருமன் ஆளும்படியாக துரியோதனனை வீர சுவர்க்கம் அனுப்புவேன் என வஞ்சினம் கூறுதல்.
- போர் செய்து நாட்டைப் பெறுவது உகந்தது என ஆவேசப்படல்.
- கொடிய துன்பங்களை அனுபவித்த பின்பும் சமாதானமாகத் தூது அனுப்பி நாட்டைப் பெறுவதை வெறுத்தல்.
- தூதாகச் சென்று துரியோதனன் ஆகியோரை அழிக்கத் துணியும் போர் வெறி காணப்படுதல்.
- தாம் கூறிய சபதங்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் நியாயத்தையும் வலியுறுத்துதல்.
  - மடப்பாவை தன் வரமும்
  - என் வரமும் வழுவா வண்ணம்

(08 புள்ளிகள்)

(07+08= 15 புள்ளிகள்)

WWW.OLEVELAPI.COM



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

**4.** **இலக்கியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில், இலக்கியத்துக்கும் இலட்சியத்துக்குமிடையிலான தொடர்பை வலியுறுத்துவதற்கு ஆசிரியர்,

(அ) சிலப்பதிகாரம்

(ஆ) மகாபாரதம்

ஆகியவற்றைக் கையாண்ட முறையை விளக்குக.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்,

(அ) காசீம்

(ஆ) மூத்த வாப்பா

ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளவாற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

04. இலக்கியங்களில் இலட்சியங்களையும் இலட்சியவாதிகளையும் கண்டுணர முடிகின்றது. இலட்சியம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. அத்தோடு அவ் இலட்சியம் சமநோக்குடையதாகவும் இருத்தல் வேண்டும். இவற்றை இலக்கியங்கள் எமக்குப் போதிக்கின்றன. இவற்றின் மூலம் இலக்கிய இன்பமும் பெற முடியும்.

அ. சிலப்பதிகாரத்தில்,

சிலப்பதிகாரம் இலக்கிய பாத்திரங்களுக்கிடையேயான சமநோக்கை விபரிக்கிறது.

- கண்ணகி, பாண்டிமாதேவி ஆகியோர் இரு வேறு இலட்சியங்களைக் கொண்ட கதாமாந்தர்கள்.
- பாண்டியன் இறந்த பின்பு உயிர் துறந்தவள் அவன் மனைவி பாண்டிமாதேவி. கணவனை இழந்ததால் அவன்மீது சுமத்தப்பட்ட பழியைத் துடைப்பதற்காகத் தன் கோபத்தை வெளிப்படுத்தியவள் கண்ணகி.
- “இருவரில் யார் சிறந்தவர்” என்ற சேரன் செங்குட்டுவனின் வினாவிற்கு “அத்திறம் நிற்க” எனச் சேரமா தேவி கூறிய விடையில் இருமகளிரது இலட்சியங்களும் சிறந்தவை என்பது புலப்படல்.

(06 புள்ளிகள்)

ஆ. மகாபாரதத்தில்

WWW.OLEVELAPI.COM

மகாபாரதம் தனிமனித பாத்திரங்களின் இலட்சியங்களினூடாக சமநோக்கை வெளிப்படுத்துகின்றது .

- உயிரினும் இனியதாக இலட்சியம் உள்ளது என்பது, அர்ச்சுனன் மானத்தை உயிரைவிட மேலானதாக போற்றியுள்ளமையால் அறிய முடிகின்றது.
  - உயிரைத் துறந்தாவது மானத்தைக் காப்பதே மக்களுக்கு வரிசையும், குடிப்பிறப்பும், மரபும் என அர்ச்சுனன் கூற்றாக இது வெளிப்படுகிறது.
- இலட்சியத்தின் பயனைத் தியாகம் செய்தவர்களையும் மகாபாரதம் குறிப்பிடுகிறது.
  - பிற உயிர்களைத் தம் உயிரில் கண்ட சமநெறிச் செல்வரான தருமர், அறத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்ததோடு இலட்சியத்தின் பயனாக முத்தி உலகம் கிடைத்தும், புழுத்த நாய்க்கு உரிமையல்லாத முத்தி உலகம் தனக்கும் வேண்டாம் என மறுத்தார்.



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

- கர்ணன் கவச குண்டலங்களை இந்திரனுக்கு வழங்கியதன் மூலமும் அவனது இலட்சியத்தின் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது எனக் கூறுதல்.

(09புள்ளிகள்)

(06+09= 15 புள்ளிகள்)

**அல்லது**

அ.

காசிம்:

- கதை சொல்லியாக விளங்கும் முக்கியமான பாத்திரம்.
- மூத்தம்மா, மூத்தவாப்பா , தங்கை ஆகியோரிடத்தில் பாசம் கொண்டவன்.
- கிராமத்து பழைய நம்பிக்கைகளை அப்படியே நம்பும் சிறுபருவத்தவன்.
  - தனது தாயார் இறந்த போது பக்குல் கத்தவில்லை என்றும் அப்படி கத்தியிருந்தா உம்மாவை வீட்டுக்குள் சாகவிடாது காப்பாற்றி இருக்கலாமென்றும் நம்பியமை.
- இறந்து போன தாயாரின் நினைவினால் துயருறுபவன்.
- மூத்தம்மாவின் செயல்களை ஆச்சரியத்தோடும் அக்கறையோடும் கவனித்துப் பெருமை கொள்பவன் .
  - அவளது தோற்றத்தையும் நடத்தையையும் ஆளுமையையும் பார்த்து அவளை ஓர் அரசியாகக் கற்பனை செய்பவன்.
- அச்சப்படுபவனான காசிம் மூத்தம்மாவைப் போலவே தானும் துணிவுடன், இருக்கப் பழகியவன்.

(09 புள்ளிகள்)

ஆ.

மூத்தவாப்பா:

- மூத்தம்மாவின் கணவர்
- மூத்தவாப்பாவின் பழக்கவழக்கங்கள்
  - கூட்டுக் கரத்தையில் படுத்துறங்குதல்
  - கரத்தையில் விறகு பொறுக்க செல்லுதல்
  - சுருட்டு புகைத்தல், வெற்றிலை போடுதல்
- மூத்தம்மாமீது அன்பு கொண்டவர்
  - காசிம், "என்னத்துக்கு இந்த வண்டிலுக்கு குடிலப்போல ஓல கட்டினிங்க" என கேட்டதற்கு "மழ வெயில நனையாம அவவ கொண்டு போக வேண்டும்" என்று கூறியமை
- பேரப் பிள்ளைகளில் அன்பு கொண்டவர்
  - "காசிமை வாவெண்டா மனெ" என தனக்கு அருகில் கூப்பிடுதல்
  - விறகு பொறுக்கச் செல்லும் போது காசிமை கூட்டிச் செல்லுதல்
- மூத்தம்மாவுடன் அன்னியோன்னியமாக வாழ்பவர்
  - மூத்தம்மா "அங்கபாரு மனெ உண்ட மூத்தவாப்பா தலைய "சூப்பின பனங்கொட்டை மாதிரி" என கிழவனை சீண்டி கொடுப்பினுள் சிரித்துக் கொள்வார் என்பதன் மூலம்
  - மூத்தம்மா இறந்த பின் காசிமை கூட்டிவர பாடசாலைக்குச் சென்ற மூத்தவாப்பா என்றும் இல்லாதவாறு தளர்ந்து போய் நிற்றல்.

(06புள்ளிகள்)

(09+06= 15 புள்ளிகள்)



WWW.OLEVELAPI.COM
අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5. சீறி ஓடாத வருங்கால மனித நதி** என்ற கவிதையில்,

(அ) எழுத்தறிவின்மையின் அவலம்

(ஆ) எழுத்தறிவில்லா இளைஞன்மீது கவிஞர் கொண்ட பரிவு

என்பன புலப்படுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

5. அ.

- பரிதாபத்தின் மொத்த வடிவமாகத் தோன்றுதல்
- கையொப்பங் கூட இட முடியாத நிலை; அதனால் ஏற்படும் வெட்கம்
- தனது உணர்வுகளை எழுத்தில் வெளிப்படுத்த முடியாமை
- எதிர்காலத்தில் எய்த வேண்டிய முன்னேற்றம் எதுவும் இல்லாமை.

(05 புள்ளிகள்)

ஆ.

- அவனின் பரிதாபத் தோற்றத்தைக் கண்டு இரங்கல்
- எழுத முடியாத அவனது நிலைமையைக் கண்டு வருந்துதல்
  - இதயம் கழன்று விழுந்ததாகக் கூறுதல்
  - தனது அலுவலகத்திற்கு அவன் வராமல் விட்டிருக்கலாம் என வருந்துதல்
- அழகு, இளமை எல்லாம் இருந்தும் வருங்காலமற்றவனாய் இருக்கும் அவனது நிலைக்கு வருந்துதல்
- தனது வழமையான வேலைகளைச் செய்ய முடியாத அளவிற்கு அவனைப்பற்றிய பரிதாப உணர்வு மேலெழல்.

(05புள்ளிகள்)
(05+05=10 புள்ளிகள்)

**6. தமிழ்ப் பண்பாடு** என்ற கட்டுரையில்,

(அ) பக்தி

(ஆ) ஒழுக்கம்

என்பன எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

6. அ. **பக்தி**

- தமிழ் பக்தியின் மொழி
- தமிழில் உள்ள அளவு போல், வேறு எந்த மொழியிலும் பக்தி இலக்கியம் இல்லை
- பரிபாடல் முதல் விபுலானந்தர் ஈறாகப் பக்தி பாடல்களைப் பாடிய புலவர்கள் ஏராளமானவர்கள்
- தமிழில் பக்தியை உணர்த்தவென உள்ள சொற்கள் பல
- பக்திப் பாடல்களை பாடி இன்புறாத தமிழ் மக்கள் இல்லை
- சங்ககால அகத்திணை இலக்கியம் பக்தி இலக்கியத்திற்குத் துணையாக அமைந்தமை.
- சமயப் பொருளற்ற பிற நூல்களுக்கும் பக்தி இலக்கியம் துணையாக அமைதல்
- நாயன்மார்கள், ஆழ்வார்கள், சேக்கிழார் , கம்பர் போன்றவர்களின் பக்திப் பண்பு உலகிலே நிகரற்றது.
- கோயில் கட்டிடம், சிற்பம், இசை, நாட்டியம் முதலான தமிழர்தம் பிற கலைகளும் பக்தியால் வளர்ச்சியுற்றவை
- தமிழரின் பக்தி கடல் கடந்த நாடுகளிலும் பரவியமை
- உலகம் போற்றும் நடராச வடிவம் தமிழரின் பக்தியின் பயனே.

(05 புள்ளிகள்)



WWW.OLEVELAPI.COM
අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දේ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**ஆ. ஒழுக்கம்**

- தமிழர் பண்பாட்டில் நீதி / ஒழுக்கம் முக்கியத்துவம் பெறுகின்றமை.
- திருக்குறளுக்கு இணையான நீதிநூல் உலகில் எங்கும் இல்லை என அல்பேட் சுவைட்சர் முதலான மேலைத்தேயத்தவர்களும் ஒத்துக்கொள்ளல்.
- தமிழில் ஈடுபட்ட மேனாட்டவர்கள் முதலில் தமிழ் நீதிநூல்களையே மொழிபெயர்த்தார்கள்.
- தமிழ் பெருந்தொகையான நீதிநூல்களைக் கொண்டது
- இம்மொழியை பேசும் மக்களுக்கு கடவுளின் அருள்,சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என போப்பையர் கூறுதல்
- தமிழ் மக்கள் வேறுவேறு நாடுகளில் வாழ்ந்து செழித்து ஓங்குவதற்கும் அவர்களது அரசியல் வாழ்க்கைக்கும் ஒழுக்கமே துணையாக அமைந்தமை

(05 புள்ளிகள்)
(05+05=10 புள்ளிகள்)

**7.** பாரதியாரது **சுயசரிதையினை** ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) எத்தகையோரால் தாம் விரும்பியவற்றை அடைய முடியாது ?

(ஆ) தாம் விரும்பியவற்றை அடைய முடியாத நிலையில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வர் ?

(10 புள்ளிகள்)

அ.

- தாழ்ந்தமனமுடையவர்கள்.
- சோம்பியிருப்பவர்கள்
- ஆடுபோல அங்கும் இங்கும் தாவித்தாவிப் பலபொருள் நாடுபவர்கள்
- தம்மையும் தம்மை வீழ்ச்சியடையச் செய்யும் இடையூறுகளுக்கு பயப்படுபவர்கள்
- தாம் விரும்பியவற்றைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்

(05 புள்ளிகள்)

ஆ.

- தமது தலைவிதியை நொந்து கொள்வார்கள்
- நண்பர்களைக் குறைகூறுவார்கள்
- கோபம் மிகுதியால் பகைவர்களை நிந்திப்பர்
- கபட வேலைகளில் ஈடுபடுவார்கள்
- பொய்யான சம்பிரதாயங்களை கூறுவார்கள்
- சாதகங்களை புரட்டிப் பார்ப்பர்
- பொய் கலந்த புத்தியினால் இழிவான நாத்திகம் பேசுவர்
- அழிவில்லாத நிறைவான விருப்பமே நன்மைகள் எல்லாவற்றையும் தரும் என்பதை உணரமாட்டார்கள்
- கண்ணில்லாதவர் போல் திகைப்பார்கள்

(05 புள்ளிகள்)
(05+05=10 புள்ளிகள்)



WWW.OLEVELAPI.COM
අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

WWW.OLEVELAPI.COM



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...